**பிடபெத்தர பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 26 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 27 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து பிடபெத்தர பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய செலவுகள் ரூபா 111,300 தொகைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | கதுருவான படகொட பாதையின் அபிவிருத்திக்காக ரூபா 50,000 தொகையொன்று கடன்கொடுத்தோர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த நிர்மாண வேலைக்காக ரூபா 48,300 தொகை 2019 பெப்ரவரி 21 திகதி கொடுப்பனவு செய்ய வேண்டும். |
| (ii) | மொறவக வாராந்த சந்தைக் காணியில் வலை மறைப்புடனான வேலி தயாரிப்பதற்காக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 267,036 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | தெனகம கந்த போகஹவத்த பாதையை அபிவிருத்தி செய்வது தொடர்பாக ரூபா 25,000 தொகை மற்றும் நேர்கூலி அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட 04 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 68,025 தொகை கடன்கொடுத்தோரின் கீழ் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | நேர்கூலி அடிப்படையில் மேற்கொள்ளும் நிர்மாண வேலைகளுக்கான கொடுப்பனவுகள் மாற்றங்களுக்கு இலக்காக கூடியதாக உள்ளதுடன் சேமிக்கப்படும் ஏற்பாடுகளுக்கு உரிய பணம் பொது நிதியத்திற்கு செலவு வைப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 69,511,567 தொகைக்கான 09 கணக்கு விடயங்கள் உரிய மீதிகள் மற்றும் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத் தொகை ரூபா 38,507,984 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | உரிய மீதிகளின் வித்தியாசங்கள் இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை சரி செய்வேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 2,073,466 தொகைக்கான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக்களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2008 ஆண்டு முதல் பல வருட காலாமாக காணப்படும் பெறுமதிகளாகக் காணப்பட்டதுடன் அது தொடர்பாக தகவல்கள் அடங்கிய அட்டவணைகளும் காணப்படவில்லை. |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியர சின் நிதிப் பிரமாணம் 571 | 03 வருட காலத்தை மிகைத் துள்ள ரூபா 131,549 இற்கான 10 வைப்பு மீதிகள் ஆதன வளிப்பு செய்வதற்கு நடவடிக் கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமா ணங்களின் படி செயற்பட வேண்டும். | வைப்புக்களை வருமான த்திற்கு எடுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/ பபாகொ/2010/1 ஆம் சுற்றறிக்கையின் பந்தி 5 | சபைக்கு சொந்தமான 40 கடைகளின் உடன்படிக்கை கள் 03 வருடங்களுக்கு ஒரு முறை நாளது வரை ஆக்கு வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் அனை த்து உடன்படிக்கை களையும் நாளது வரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 8,098,366 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,503,867 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,453,750 | 1,468,827 | 780,892 | 953,376 | 1,158,750 | 1,452,395 | 1,444,348 | 265,441 |
| வாடகை | 4,981,000 | 11,176,728 | 11,199,626 | 1,639,560 | 4,448,000 | 5,715,998 | 5,256,984 | 1,662,458 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 263,100 | 387,178 | 379,178 | 78,522 | 305,100 | 312,923 | 312,923 | 70,522 |
| ஏனைய வருமானங்கள் | 11,915,500 | 9,204,520 | 9,025,283 | 16,593,834 | 10,821,000 | 12,134,615 | 9,376,183 | 16,414,597 |
| மொத்தம் | 18,613,350 | 22,237,253 | 21,384,979 | 19,265,292 | 16,732,850 | 19,615,931 | 16,390,438 | 18,413,018 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 18,613,350 தொகை யாகும். மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 18,413,018 இற்கான நிலுவைத் தொகை மற்றும் சிட்டையிடல் ரூபா 22,237,253 தொகை உடன் ரூபா 40,650,271 அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 21,384,979 தொகை மாத்திரம் காணப்பட்டமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 19,365,292 ஆகும். அறவீடுகளின் முன்னேற்றம் 53 சதவீதமாகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக்கொள்கிறேன். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

#### (அ) வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| 2010 பெப்ரவரி 28 திகதிய 1824 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தை சேர்ந்த 10 கிராம உத்தியோகத்தர் பகுதிகளை முன்னேற்றப்பட்ட பிரதேசங்களாக வெளியிடப்பட்டிருந்த போதிலும், 2010 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரையும் சபையினால் வீதவரி அறவீடு செய்யும் செயற்பாடு ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. | வீதவரி அறவீடு செய்யும் செயற்பாடு விரைவாக மேற்கொள்ளப் பட வேண்டும். | வீதவரி அறவீடு செய்வதற்காக வீதவரி வலயத்தை இனங் கண்டு அதற்கான அங்கீகாரம் பெறுவதற்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) ஏக்கர் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஆரம்ப நிலுவை ரூபா 264,039 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 31,943 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 295,982 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 30,412 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 265,570 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. அறவீடு களின் முன்னேற்ற சதவீதம் நூற்றிற்கு 10 ஆகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**2.2.4 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | ஆரம்ப நிலுவை மீதி ரூபா 818,761 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 1,759,100 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 2,577,861 தொகை அறவிடப்பட வேண்டியி ருந்தது. மீளாய்வாண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 1,635,612 தொகையாக காணப் பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 942,249 தொகை நிலுவை மீதியொன்று காணப்பட்டது. அறவீடுகளின் முன்னேற்றம் 63 சதவீதம் ஆகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | மீதியாகவுள்ள வாடகையாளர்கள் தொடர்பாக இணக்க சபை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வழக்குகள் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 942,249 தொகையான பெற வேண்டிய கடை வாடகை வருமானத்தில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 169,636 இற்கான மீதிகள் அடங்கியிருந்தது. நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்காக பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) பிரிவின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | கடைகளை சபைக்கு உரித்தாக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

## 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 200 அறிவித்தல் பலகைகளில் இருந்து ரூபா 531,965 இற்கான கட்டணம் ஒன்று அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | இது வரை ரூபா 63,578 இற்கான தொகை ஒன்று அறிவித்தல் பலகை கட்டணம் என அறவிடப்பட்டதுடன் மீதித் தொகையையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 2.2.6 ஏனைய வருமானங்கள்

### நீர்க் கட்டணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 1,186,705 இற்கான பெற வேண்டிய நீர்க் கட்டணம் வருமானத்தில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 572,778 இற்கான மீதிகளும் அடங்கியுள்ளன. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | இந்த நீர்ச் செயற்திட்டம் சில காலமாக செயற்படாத நிலைமையில் காணப்பட்டதுடன் நிலுவை தொகையை அறவீடு செய்வதற்கு இயலாதுள்ளது. குறிப்பிட்ட நிலுவைத் தொகையின் பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | ஆரம்ப நிலுவை மீதி ரூபா 958,393 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 1,103,075 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 2,061,468 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 879,070 தொகையாக காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,182,398 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 43 ஆகும் | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நீண்ட காலமாக காணப்படும் நிலுவை மீதிகளின் பெறுமதிகள் இந் நிலுவை மீதிகளில் காணப்படல் மற்றும் 2018 திசெம்பர் மாதத்திற்கான சிட்டையிடல் பெறுமதி கூடிய பெறுமதியினை பெற்றிருத்தல் இதற்குக் காரணமாகும். |
| (iii) | மீளாய்வாண்டின் போது நீர் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட 15 நுகர்வோரிடம் ரூபா 44,917 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | இந்த நீர்ச் செயற்திட்டம் 2014 ஆண்டு முதல் செயற்படும் நிலையில் காணப்படாததுடன் நீர்வழங்கல் அலுவல்கள் நீண்ட காலமாக நடைபெறாமையால் அறவீடு செய்தல் அலுவல்களை மேற்கொள்ள முடியாதுள்ளது. எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. |

### 2.2.7 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,078,522 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 14,328,608 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை தண்டம் மற்றும் கட்டணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை முத்திரைக் கட்டடணம் ரூபா 3,184,770 தொகை 2019 பெப்ரவரி 05 திகதி அளவில் கிடைத்திருந்தது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலை பேறான அபிவிருத்தி குறிக்கோள் கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தி லுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவ தற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகள் நெருங்குவதற்கு நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு செயற்படுத்த வேண்டும். | பொது மக்களின் சுகாதாரம், பொது துணை சேவைகள் பொது பாதைகளை நிருவகிக்கும் போது அனைத்து பொது மக்களுக்கும் ஒரே விதத்தில் அனுபவிக்கக் கூடிய விதமாக அலுவலகங்கள், முன்பள்ளிகள் மற்றும் நூலகங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன் அதிகாரப் பிரதேசத்தில் அனைத்து கிராமியப் பாதைகளும் உள்ளடக்கக் கூடிய விதமாக சபைக்குச் சொந்தமான இயந்திரங்களை பயன்படுத்திக் அபிவிருத்தி அலுவல்களும் மேற் கொள்ளப்படுகின்றது. மரம் நடுகை நிகழ்ச்சித் திட்டம் எல்லாப் பகுதிகளும் அடங்கும் விதத்தில் செயற்படுத்தப்பட்டுள்ளது. |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

**ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 09 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 07 மிகை பதவியணி யினை முறைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணி மிகை கள் பதவிக்கான முறைப்படுத்துவதற் காக மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 05 ஆரம்ப நிலைப் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதியை பெறுவதற்காக பிரதான செயலாளர் அலுவலகத்திற்கு தொடர்பு கொண்டுள்ளேன். |

### 3.3 செயற்பாட்டு திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| புரநெகும செயற்திட்டத்தின் கீழ் பிடபெத்தர பழைய பொதுச் சந்தையை அகற்றி ரூபா 23,968,124 இற்கான செலவு ஒன்று மேற்கொள் ளப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 14 கடைகள் பழைய வாடகையாளர் களுக்கு வழங்கியிருந்ததுடன், கடைகளை வாடகைக்குப் பெற்றி ருந்த நான்கு வாடகையாளரிடம் ஒரே தடவையில் அறவிடப்பட வேண்டிய ரூபா 350,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் அதன் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகை விரைவில் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கு எதிர்காலத் தில் நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 விளைவற்ற/ குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2016 ஆண்டின் போது புரநெகும செயற்திட்டத்தின் மூலம் ரூபா 4,124,487 இற்கான செலவு மேற் கொள்ளப்பட்டு பிடபெத்தர சந்தை வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கழிப்பறை முறைமையை வருமானம் உழைக்காமல் செயற்படாது காணப்பட்டது. | சபையின் ஆதனங்களில் இருந்து உச்ச பயன்பெற வேண்டும். | பொது கழிப்பறையை நாளாந்தம் பயன்படுத்தும் ஆட்களின் எண்ணிக்கை குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் டென்டர் பண்ணுவதற்கு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதனை சபையின் பொது மக்களுக்கு வழங்கும் பொது பயன்பாட்டுச் சேவை ஒன்று என கணித்து செயற்படுகின்றேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 செலவு விடயங்களில் சேமிப்புக் களின் கூட்டுத்தொகை ரூபா 4,881,604 தொகையாகக் காணப் பட்டதுடன் அப்பெறுமதிகள் 06 சதவீதம் முதல் 78 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | பல்வேறு காரணங்களினால் செலவு விடயங்களில் சேமிப்பு காணப்பட்டது. |
| (ஆ) | 03 வருமான விடயங்களை நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 4,493,755 தொகையாக இருந்ததுடன், அவை 04 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்பார்த்த வருமானம் உரிய முறையில் கிடைக்கவில்லை. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென்மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறி க்கைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு கடமைகளுக்கு மேலதிகமாக வருடாந்த பாதீட்டு தயாரித்தல், வருடாந்த இறுதிக் கணக்குகள் தயாரித்தல், உறுதிச் சான்று களை பரிசோதனை செய்தல் கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பாக செயற்படுதல் ஆகிய கடமைகளும் நிறைவேற்று வதற்காக காட்டப்பட்டுள்ளது. |